[1982 மார்ச் 24

கரும்புக் சாறிலிருந்து எரி சாராயம் தயார் செய்யும் திட்டம்.

* வினா எண் 641—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) கரும்புச் சாறிலிருந்து எரிசாராயம் தயார் செய்து மோட்டார் வாகனங்களுக்கு பயன்படுத்தும் முறையை ஆராய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(ஆ) அது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) கரும்புச் சாறிலிருந்து நேரடியாக எரி சாராயம் தயார் செய்து மோட்டார் வாகனங்களுக்கு பயன்படுத்தும் முறையை அரசு இதுவரை மேற்கொள்ளவில்லை. ஆனால் கரும்பு சாறிலிருந்து சர்க்கரை எடுக்கப்பட்ட பிறகு அதிலிருந்து உண்டாகும் கழிவுப் பொருள்களில் ஒன்றான மொலாசசிலிருந்து எரிசாராயம் தயாரிக்கப்பட்ட பின்பு அதனை பெட்ரோலுக்குப் பதிலாக 'எத்னீால்' என்கிற பெயரில் அரசு மோட்டார் வாகனங்களுக்கு உபயோகிக்கலாம் என்கிற உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) தமிழக அரசுக்குச் சொந்தமான மூன்று வண்டிகளை எத்னாலை எரிபொருளாக உபயோகித்து ஆராய்ச்சி முறையில் ஓட்டுவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது.

திரு. என். எ.ஸ் வீ. சித்தன் : தலைவரவர்களே, எரிபொருள் பற்றாக்குறை உலகம் பூராவும் வியாபித்திருக்கிறபோது இந்த கரும்புச் சக்கையிலிருந்து எத்னால் எடுத்து அதை எரிபொருளாகப் பயன்படுத்துவது ஒரு நல்ல திட்டம். அரசுக்குச் சொந்தமான ஒன்றிரண்டு வாகனங்களுக்கு அதை பரீட்சார்த்தமாக பயன்படுத்திப் பார்க்கும் முடிவை எடுத்திருப்பதாகச் சொன்னார்கள். அப்படியானால் அதற்கு ஆகும் செலவு என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

1982 மார்ச் 24]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்திடம் இதற்கான பரிசீலனைகள் ஒப்படைக்கப் பட்டு, அங்கு அதற்கான ஆராய்ச்சிகள் ஒரு வல்லுநர் குழுவால் மேற்கொள்ளப்பட்டது. 2—3 வாகனங்கள் பரீட்சார்த்தமாக இந்த எரிபொருளைப் பயன்படுத்தி ஓட்டப்பட்டு வருகின்றன. இன்னும் 5 வண்டிகள் தேவை என்று கேட்டு இருக்கிறார்கள். அதற்கும் ஆவன செய்யப்பட்டு இருக்கிறது. ரூபாய் 5 இலட்சம் வரை அதற்காக நிதி ஒதுக்கப்பட்டு இருக்கிறது. தீவிரமான ஆராய்ச்சி முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் முடிவின் அடிப்படையில் அதற்கு ஏற்ப முடிவுகள் மேற்கொள்ளப் படும்.

திரு. இல. பலராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, எரி சாராயத்தின் மூலம் தயாரிக்கப்படும் எரி பொருளைக் கொண்டு மோட்டார் வாகனங்கள் ஓட்டப்படுகின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்று மின்சாரம் தட்டுப் பாடாக இருக்கிறது. ஆகவே, விவசாயிகள் தண்ணீர் இறைக்கப் பயன்படுத்தும் யந்திரங்களையும் ஓட்டுவதற்கு இந்த எரிபொரு ளைப் பயன்படுத்த அரசு பெரிய திட்டத்தை ஏதேனும் ஆய்வு செய்து இருக்கிறதா? அதனால் விவசாயிகளுக்கு நன்மை ஏற் படும் என்று தெரிந்தால், அதை அமல்படுத்த அரசு தீவிரம் காட்டுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, ஆராய்ச்சி இப்போது முதல் பகுதியிலேதான் இருக்கிறது. அது முடிவுற்ற பின்னாலே மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை பற்றி முடிவு செய்யலாம்.

சிறு சர்க்கரை ஆலைகள் அமைக்கும் திட்டம்

*வினா எண் 642—திரு. செ. செம்மலை, வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 6-ஆவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் கூட்டுறவுத் துறையில் சிறு சர்க்கரை ஆலைகள் அமைப்பதற்கான திட்ட அறிக்கை அரசால் தயாரிக்கப்பட்டு விட்டதா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த இடங்களில் அத்தகைய ஆலைகள் அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஆய்வில் உள்ளது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இரண்டு பெரிய சர்க்கரை ஆலைகளையும், 3 சிறிய சர்க்கரை ஆலைகளையும் அமைக்க அனுமதி வழங்கப்பட்டு இருக் கிறது. அதற்கான இடம் தேர்வு போன்ற பணிகள் நடைபெறு கின்றன.